# மனைப்பொருளியல்

## சிறப்பான வாழ்க்கைச்சூழல்



Start Your Learning Journey with e-thaksalawa
The National e-learning Portal for The General Education

தேர்ச்சி மட்டம்: 1.2



## 1.2 கட்டட மற்றும் நிலத்தோற்ற நிர்மாணிப்பு

⇒ பாதுகாப்புப் பெற பயன்படுத்திய கூறுகள்

உ+ம் : தரை, சுவர், கூரை

⇒ ஆரம்ப காலத்தில் இலங்கையில் காணப்பட்ட கூரைகள், சுவர்கள்

உ+ம் : சாணத்தால் மெழுகிய சுவர்கள் , வைக்கோல் , ஓலையால் வேயப்பட்ட கூரைகள்

⇒ நிலத்தோற்றக் கூறுகள்

உ+ம் : தாவரங்கள், நிலவிரிப்புக்கள், புற்றரை என்பன புதிய நிர்மாணிப்பாக வளர்ச்சியடைந்து வந்துள்ளன.

**கிராமிய நகரச் சூழல்**

சனத்தொகை அதிகரிப்புக் காரணமாக மனிதன் உலகு எங்கும் பரம்பிச் சென்று குடியிருப்புக்களை உருவாக்கி எதிர்பார்ப்பு, பொருளாதார வளங்களின் கிடைப்புத்தன்மை என்பவற்றை கிராமங்களும் நகரங்களும் உருவாக்கியமை கிராமிய நகரச் சூழல் எனப்படும்.



### வாழ்க்கைச் சூழலை நிர்மாணிப்பதன் முக்கியத்துவம்

⇒ சமூக, பௌதீக உள நெருக்கிடைகளை இழிவளவாக்குதல்

⇒ பூகோள நிலைபேறான தன்மை மீது பங்களிப்புச் செய்யத்தக்க சிறந்த வாழ்க்கைச் சூழலைக் கட்டியெழுப்புதல்

⇒ வாழ்க்கைச் சூழலை ஆக்கப்பூர்வமாகவும், ஆராய்ச்சிபூர்வமாகவும் சிறப்பான முறையில் இட்டுச் செல்லுதல்.

### கட்டிடங்கள் மற்றும் மனிதனால் ஆக்கப்பட்ட சூழல்களை வடிவமைத்தல்

சூழல்சார் வடிவமைப்பின் போது கவனத்திற் கொள்ளப்படும் பயன்பாட்டுக் காரணிகள்

⇒ நிலத்தோற்றப் பயன்பாட்டுக் காரணி



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## நிலத்தோற்றப் பயன்பாட்டுக் காரணி

நிலத்தோற்றப் பயன்பாட்டுக் காரணி என்பது நிலத்தோற்றம் அமைக்கும் போது ஏற்கனவே அங்கு காணப்படும் சூழற்காரணிகளை கவனத்திற் கொள்ளுதல் ஆகும்.

**சூழற்காரணிகள்**

- ◊ பொருத்தப்பாடு
- ◊ கலைத்துவம்
- ◊ அமைப்பும், அமைவும்
- ◊ அளவும், விகித சமமும்
- ◊ பெறுமானத் தொகுதி

**பொருத்தப்பாடு**

⇒ பௌதீக, சமூக பொருளாதார, அரசியற் காரணிகளுடன் பொருத்தியமைதலே பொருத்தப்பாடு எனப்படும்

⇒ பொருத்தப்பாட்டின் இயல்புகள்

1. பிரதேச நியம அபிவிருத்தி நடவடிக்கைகளுடன் பொருத்துதல்
2. பிரதேச மேற்காவுகைக் கோலங்கள், நிலத்தின் தன்மையுடன் பொருந்துதல்
3. வதிவோரின் மனப்பாங்குடன் பொருத்துதல்

**கலைத்துவ அம்சங்கள்**

⇒ ஆக்கங்கள் யாவும் கண்கவர் தன்மை கொண்டதாக அமைதல்

⇒ தொழில்நுட்பத்துக்கும், அழகுக்கும் இடையே பரஸ்பரத் தொடர்பை ஏற்படுத்தல்

⇒ உயிரோட்டமான ஆக்கமாகவும், பூரணத்துவமான ஆக்கமாகவும் அமைதல்

⇒ கால வெளியைத் தீர்மானித்தலும், நியமங்களுடன் பொருந்தியதாகவும் அமைதல்

தொகுப்பு : திருமதி கருணாமலர் மோகனசுந்தரம் , ஆசிரிய ஆலோசகர் (வலயக்கல்வி அலுவலகம் , வலிகாமம்)
கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா, ஆசிரியர் - த.தொ.தொ (மு/உடையார்கட்டு. மகா வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

⇒ கலைத்துவமானது அந்தந்த வரலாற்று யுகங்களின் நிர்மாணிப்புத் தொழினுட்பமும், கலைத்துவமும், பண்பாட்டு விழுமியங்களும், வாழ்க்கைச் சூழலும் உள்ளடங்கியதாக அமைதல்

உ+ம் : கண்டிப்பிரதேச நிர்மாணிப்புக்களில் பண்பாட்டு அம்சங்கள் அடங்கியுள்ளமை

**அமைப்பும், அமைவும்**

⇒ அமைப்பு பௌதீகச் சூழலுடன் பொருந்தியதாக அமைதல்

( நிலமானது மேட்டு நிலமா? சம தரையானதா?, சதுப்பு நிலமா என அறிதல் )

⇒ அமைவினை அவதானிக்கும் போது நிலம் அமைந்துள்ள சூழல் கருத்திற் கொள்ளப்படல்

⇒ நிலத்தின் வடிவம் கருத்திற் கொள்ளல்

⇒ சுற்றுப்புறச் சூழல் சுகாதாரத்திற்கு ஏற்றதா? (சுவாசம்) எனவும் சூரிய ஒளி கிடைக்கும் விதத்தினையும் கருத்திற் கொள்ள வேண்டும்

**அளவும் விகிதசமமும்**

⇒ சூழற் கூறுகளாகிய நிலம், மரஞ்செடி கொடிகளின் அளவுடன் கட்டிடங்களின் அளவும் பொருந்தி அமைதல் **அளவு** எனப்படும்.

⇒ கட்டிடத்தின் நீளம். அகலம் உயரம் என்பவற்றுக்கான விகிதம் பொருத்தியமைதல் **விகிதசமம்** எனப்படும்.

**பெறுமானத் தொகுதி**

⇒ பிரதேசத்திலுள்ள கட்டடங்களுக்கு உரித்தான பண்பாட்டு அம்சங்கள் பாதுகாக்கப்படும் வகையில் நிர்மாணிப்புக்களை அமைத்தல். அதாவது ஏற்கனவே உள்ள பெறுமானத் தொகுதிகளை மதிக்கும் வகைளிலும் அப்பிரதேச தேசிய தனித்துவத்தை பாதுகாக்கும் வகையிலும் அமைத்தல்.

⇒ உதாரணம் : கண்டிநகர் தலதாமாளிகையின் கூரை

தொகுப்பு : திருமதி கருணாமலர் மோகனசுந்தரம் , ஆசிரிய ஆலோசகர் (வலயக்கல்வி அலுவலகம் , வலிகாமம்)
கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா, ஆசிரியர் - த.தொ.தொ (மு/உடையார்கட்டு. மகா வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk